உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



தெல்லிநகர்
உழுதுடைப்பதித்

# துர்க்காதேவி பதிகம்

துர்க்காதேவி ஆலய நிருவாக சபையாரால்
வெளியிடப்பெற்றது.

இந்தப் புத்தக விற்பனையால் வரும் பணம்
ஷை ஆலயத் திருப்பணிக்கு உபயோகிக்கப்படும்.

1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## தெல்லிநகர், உழுகுடைப்பதித்
# துர்க்காதேவி பதிகம்

### காப்பு

வெண்பா

சீரார்நற் றெல்லிநகர் சேரே ருழுகுடைவாழ்
பாரார்துர்க் காதேவிப் பண்ணவிக்கு—நேரார்வத்
தாற்பதிக மோதவுயர் தந்திமுகத் தெந்தையிரு
காற்சதவம் போருகப்பூக் காப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய விருத்தம்

உலகமொரு மூன்றினுங் குலவுபற் பலகோடி
யோனிபே தங்களாகி
ஊர்வநீர் வாழ்வதத் துவநடப் பனநிற்ப
வுயரப் பறப்பதவழ்வ
நிலவவரு மக்கள்வகை வகையாக வீன்றுமிக
நீடருள் சுரந்தவைகூடம்
நினைவறிந் திருகண்க ளிமையாம லிரவுபகல்
நீங்காம லுடனிருந்து
அகிலபோ கங்களையு மூட்டியன் பொடுவளர்த்
தாதரித் திடுமன்னையே
அடியரனு தினமுமுண் டானந்த முறவைகு
மரியவா னவமிர்தமே
இலகவா னுதலணங் கேயெனது துயரெலாந்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (1)

எந்தநா ளெந்தவகை வந்துபந் தித்ததிங்
கென்னைமல மென்பதறியேன்
ஏதிலாக் கற்பங்க ளெண்ணிலெண் ணிலவாய்
இருட்டல மிருந்ததறியேன்
அந்தநடு வாதியில் லாதமக மாயிநின்
அருளினு லறிவுதோன்றி
அமலமாம் வகையற்ப புல்பூடு மரமாகி
யாமெழு வகைப்பிறப்பாய்
வந்துவந் தேபோவ தறியே னினிச்செயும்
வண்ணமே தென்பதறியேன்
வரமருவு முன்சரண் போற்றவறி யேன்சாண்
வளர்க்கவகை தேடியோடிச்
சிந்தைநொந் தேயயரு மறிவிலேன் குறையெலாந்
தீர்த்தருள்செய் வாயம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலமாயை கன்மவிரு ளிடையன்று விழவந்த
வகையொன்று மறியாப்பெரும்
மதிகெட்ட வென்னையிப் படியின்று வரையுமிவ்
வகையாற்றெ ஞ்ஞதமிடியால்
நலனென்று மின்றியுயி ரொடுசெத்த பிணமாகி
நாடோறும் வாழவைத்தாய்
நாடுமுன் னருளுக் கடாதன்னை யேயீது
நானுனது மைந்தனன்பாய்
இலகுமிரு குழையருகு பொருதுசெவ் வரிசிதறி
யிருவயில் களைப்பழித்த
இணைகயற் கண்ணிறு லென்முகம் பார்த்துலக
வின்பெலாந் தந்துயாருஞ்
செலவரிய தாயடியர் செல்கதிய தானபர
சிவபதமு மீந்தருள்செய்வாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (3)

அருளோங்கு மானந்த வல்லிநா லெண்வகை
அறங்களை வளர்த்தசெல்வி
அயனாதி முப்பத்து முக்கோடி தேவர்நித
மடிபரவு மிறைவிபோதப்
பொருளோங்கு முயர்தவத் தோரருங் கதியைப்
பொருந்தவழி காட்டுமனையே
பொருளிலேன் ருய்தந்தை தமருதவி தானிலேன்
புவியிலொரு சுகமுமில்லேன்
மருளோங்கி நிறைமனத் தேனிகம் பரமான
வாழ்வினுந் தாழ்வுறுவனோ
வந்துவந் தேபோன வாழ்வினல் நொந்துளம்
வாடுமென் முகநோக்கியே
தெருளோங்கு முயர்கல்வி செல்வமுந் தந்துதுயர்
தீரவருள் செய்யம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமெலாப் பிறவியினு மானுடப் பிறவிதான்
பெறலரிய தென்றுபெருநூல்
பேசுமிப் பிறவியை யெடுத்தும் பெறும்பேறு
பெறவிடாக் கொடுமைசான்ற
வறுமைவந் தென்குலங் கல்விசெல் வங்குணம்
வடிவெலாங் குடிபோக்கவே
மதிவாடி னேன்றருண மீதருள்வை யிந்திரன்
வாழ்வினோ ரிடும்பைநீங்கக்
கறுவுகொ ளுளத்தொடுறு சமமொழித் தருளிலாக்
கள்ளவசு ரக்கிளையுடன்
கருதுகா சிபமுனிவ னொடுசேர்ந்து மாயைதரு
காதலன் சூரபதுமச்
செறுநனைச் செற்றவறு முகவனைப் பெற்றவுயர்
திருவுற்ற பெருநங்கையே
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (5)

பங்கய மலர்ப்பதத் துணைகளும் பரிபுரம்
பாடகம் பாதசரமும்
பைங்கொடியை நிகரிடையு நிகரில்பட் டுடையுமருள்
பகிரபய வரதகரமும்
துங்கதொடி சூடகமு மாகமுத் தாரமுந்
துயல்ரத்தி னக்குழைகளும்
சோதிவிடு திருவதன முடனேழை யேன்முன்
துலங்கவந் தருள்புரிகுவாய்
திங்களைத் தீண்டுபல வின்கனிகள் கீண்டுமாத்
தீங்கனிகள் சிதறிவாழைச்
செங்கனிகளைத்துவைத் துக்குரு கினம்வெரீஇச்
சேவல்பெடை யோடுமிரியத்
தெங்கில்முதிர் பழமுதிரு மங்குல்படி சோலையுஞ்
செந்நெல்விளை கழனியுஞ்சூழ்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
அமரிசங் காரிகௌரி
ஆறட் சரத்தியுர நேமிக் கரத்திவலி
யாரம் பணத்திநிகரில்
சுந்தரி நிறைந்தபர மானந்தி நித்தியச்
சுகசோ பனத்திவாய்ந்த
சூலியெண் டோளியயி ராணிமுத லானவுயர்
சூரரம் பையரிறைவியே
தந்தைநீ தாயுநீ தமருநீ கனமிக்க
சகலபாக் கியமுநீயே
தாரணியி லுனையன்றி வேறுதுணை யிலையெனது
சஞ்சல மெலாநீக்கியே
சிந்தைமகிழ் நீடவாந பந்தமரு ளோடவுறு
தீவினைகள் வாடவருவாய்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (7)

நாரணன் மலரிலுறை யாரணன் புகழிலுயர்
நான்மருப் புளவாரணன்
நவையிலா நித்தர்மல முத்தரா ஞெரெலாம்
நவிலுமா சாரமொருவிப்
பேரணங் கொடுபணித் திடுதொண்டு கலையெலாம்
பிழையிலா தேயியற்றிப்
பீடழிந் தவசமுற நாடொறும் வினைகொண்டு
பெருமிதத் தோடுகருணைக்
காரண மடாதுற்ற மகிடா சுரன்மிகக்
கறுவியெதிர் பொருதஞ்சியே
கரவிலொரு வன்னிமர மாகவெட் டித்துண்டு
கண்டண்டர் வாழவைத்த
சீரணங் கேயுனது புகழெனது நாவினுற்
செப்பவெளி தோவம்மணீ
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதப் பிரவல்லி திசையுக்ர சோழனருள்
மகளுற்ற குன்மவலியும்
மாமுகமு நீக்கியலர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டுலகி னிற்கொடிய மிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறுதரு கோயில்கொண் டாசகல் விழாப்பவனி
பேசுமயில் மீதுவந்து
ஆருமயல் தீரவருள் விளையாடல் ‡ செய்துவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்ந்துப சரித்திடவு மடியருறு
மாகுல மகற்றிமேலாஞ்
சீருமுயர் கல்வி ஞானம்பே றளிக்கவுந்
திருவுளங் கொண்டெழிலுறுந்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (9)

பந்தபா சத்திறற் பந்தித்து மதிகெட்ட
பாவியான் செய்தபிழைகள்
பலகோடி யெனினுமவை யாவும் பொறுப்பதுன்
பாரமெனை யீன்றதாயே
எந்தனுடல் பொருளாவி மூன்றுமுன் றனதாக
வீந்தே னெனக்கிங்கினி
ஏதொன்று மில்லையெல் லாமுன்ன தேதகா
தென்னைக்கை விடல்சென்னிதான்
வந்திக்க விழிகடரி சிக்கக் கரங்குவிய
வரவலந் தாள்கள்வாழ்த்த
வாய்செவிகள் கேட்பவரி தாயபுக ழோடுதிரு
வடியையனு தினமுமனமே
சிந்திக்க வும்வரந் தந்தருள வேணுமென்
சென்மசா பலியமாகத்
தெல்லிநக ருழுகுடைப் பதியிலுறை நிறைசெயச்
செல்விதுர்க் காதேவியே. (10)

‡ மானம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை பொறுத்தல்

**கட்டளைக் கலித்துறை**

சொல்லார் விருத்தத் தொகையா லியற்றிய தொல்பதிகத்
தெல்லாப் பிழையும் பொறுத்தே யிரங்கி யினிதருள்வாய்
மல்லார் வளமிகு பண்ணைகள் சூழும் வயங்குதெல்லித்
தொல்லார் நகரி லுழுகுடை வாழ்செய்துர்க் கைத்திருவே.

# வாழி

**ஆசிரிய விருத்தம்**

இசைமருவு வேதமுட னாகம புராணங்கள்
என்றுநில வுற்றுவாழி
ஏமமுறு பெரியோர்கள் செய்கின்ற தவவேள்வி
இனிதாக முற்றிவாழி
அசைவின்றி யந்தணர்கள் வானவர் பசுக்களிவை
அபரிமித முற்றுவாழி
அறங்களெண் ணான்குமிக யாவரும் போற்றியே
அன்பொடுஞ் செய்துவாழி
திசையெங்கு முறமுறைமை செங்கோல் செலுத்தியே
திறல்படைத் தரசன்வாழி
திகழ்மதியின் மும்மாரி பெய்துபழ னத்துவளர்
செழும்பயிர் தழைக்கவாழி
மிசைகொண்ட நீறினுட னக்கவட மணிசைவ
வேடவடி யார்கள்வாழி
மிகுதெல்லி யுழுகுடைப் பதியில்வாழ் துர்க்கையும்
வீரமொடு வாழிவாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆக்கியோன்**

நெல்லிநகர் சேர்வவுறை வத்தை மேவுஞ்
சின்னப்பு வின்சுதன்கந் தையா வென்னும்
நல்லறிஞன் குகனடிமை பூண்ட தோன்றல்
நவிலுமுழு குடையின்மே விடுந்துர்க் கைக்கா
யொல்லுபதி கம்பாடித் தருக வென்ன
வோதினன்சங் கானைதனி லுதித்தோ னை
பல்குபுகழ்த் தம்பர்சுதன் பொன்னை யாவாம்
பாவாணர் மெச்சுபுக ழோசன் ரூனே.

திருச்சிற்றம்பலம்

குகன் அச்சகம், தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org